DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.327 /2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுரேஷ் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.கோவிந்தன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 16.10.2025

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது பெருமாள்மடையில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 26.09.2022 தேதி மாலை 5 மணியளவில் ஆர்எஸ் மங்கலம் பெரியார் நகருக்கு ஒருவேலையாக சென்றிருந்தேன். அப்போது ஆர்எஸ்மங்கலம் காவலர்கள் அவ்விடத்தில் எறிந்து நின்ற ஒரு இருசக்கரவானத்தை புகைப்படம் எடுத்துகொண்டு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள்.மேற்படி விசாரணை செய்ததற்கு

சாட்சியாக என்னை இரண்டு ஆவணங்களில் கையொப்பம் இடசொன்னார்கள். நானும் கையொப்பம் போட்டு கொடுத்தேன். என்னுடன் சாட்சி சத்தியமூர்த்தியும் கையொப்பம் போட்டுகொடுத்தார். **என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனனிடம் காட்டப்படும பார்வைமகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. பெருமாளமடைக்கும் பெரியார் நகருக்கும் 3 கிலோமீட்டர் துூரம் இருக்கும் என்றால் சரிதான். பெரியார் நகரில் சுமார் 60 வீடுகள் உள்ளன என்றால் சரிதான்.இவவழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது மச்சான் ஆவார். ஆர்எஸ் மங்கலம் காவல் நிலையம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் இட்ட இரண்டு ஆவணங்களில் எழுதப்பட்டிருந்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் நான் படித்து பார்த்தேன் ஆனால் தற்போது நினைவில் இல்லை. காவல் நிலையத்தில் வைத்துதான் என்னிடம் இரண்டு ஆவணங்களில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. பெரியார்நகரில் வைத்துதான் கையொப்பம் பெற்றார்கள்.

2. என்னிடம் யார் கையொப்பம் பெற்றனர்என்றால் காவலர்கள் கையொப்பம் பெற்றனர் யார்பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது.நான்முதல் விசாரணயில் சொன்னாவறு போலிசார் என்னிடம் பெரியார் நகரில் வைத்து கையொப்பம் பெறவில்லை என்றும் நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கே செல்லவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்த ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டேன் என்றும் அ.சா.1 எனதுஉறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.